மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2022 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண்.80/2018
---------

1.மடத்துக்குளம் வட்டம், கொழுமம் கிராமம், கொழுமம் கஸ்பா, வரதராஜபுரத்தில் வசிக்கும் கே.ஆர்.கிருஷ்ணன் என்பவரின் மகன் சுமார் 72 வயதுள்ள திரு.கே.வித்யாசங்கர்.

2.கோவை–41, மஹாராணி அவன்யூ 1 பேஸ், கதவு எண்.104 ல் வசிக்கும் கோபாலகிருஷ்ணன் என்பவரின் மகன் சுமார் 45 வயதுள்ள திரு.கே.ஜி.வெங்கட்ராமன்.

3.சென்னை–4, கிழக்கு அபிராமிபுரம், முதல் தெரு, கதவு எண்.18–ல் வசிக்கும் கே.சீனிவாசன் என்பவரின் மகன் சுமார் 50 வயதுள்ள திரு.கே.எஸ்.கணேஷ்.

4.கோவை–46, கல்வீரம்பாளையம், எஸ்.பி.கே.நகர், கதவு எண்.17 ல் வசிக்கும் கே.வி.ராமமூர்த்தி என்பவரின் மகன் சுமார் 45 வயதுள்ள திரு.கே.ஆர்.ஸ்ரீ ராம்.

.. வாதிகள்

/எதிர்/

1.மடத்துக்குளம் வட்டம், கொழுமம் கிராமம், கஸ்பா, வரதராஜபுரம், ஸ்ரீ சுந்தரவிஜயம் என்ற முகவரியில் வசிக்கும் கே.எஸ்.சந்திரசேகரன் என்பவரின் மகன் சுமார் 43 வயதுள்ள திரு.கே.சி.கிருஷ்ணன்.

2.திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், முத்துநாயக்கன்பட்டி, குருவன்வலசு, 8 வது வார்டு, கதவு எண்.8/3–ல் வசிக்கும் நாட்ராயன் என்பவரின் மகன் சுமார் 52 வயதுள்ள திரு.என்.சௌந்தராஜன்.

3.திருப்பூர் மாவட்டம், கணியூர், எஸ்.ஆர்.பட்டிணம், மருத்துவமனை மேடு, எம்.ஜி.ஆர்.காலனி, கதவு எண்.674 ல் வசிக்கும் அன்பரசு என்பவரின் மகன் சுமார் 46 வயதுள்ள திரு.ஏ.பாலமுருகன்.

4.திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகர், என்.என்.பேட்டை சந்து, கதவு எண். 39/18 ல் வசிக்கும் துரைச்சாமி என்பவரின் மகன் சுமார் 60 வயதுள்ள திரு.டி.சௌந்தராஜன்.

5. 1 நிர் இணை சார்பதிவாளர், 1 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம், பழனி.

6.மடத்துக்குளம் வட்டம், கொழுமம் கிராமம், கஸ்பா, வரதராஜபுரத்தில் வசிக்கும் ராமசாமி என்பவரின் மகன் சுமார் 52 வயதுள்ள திரு.கே.ஆர்.சுந்தரம்.

7.திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மதியழகன் நகரில் வசிக்கும் லேட்.முருகேசன் என்பவரின் மகன் சுமார் 30 வயதுளள திரு.முனீஸ்வரன்.

8.மஹாராஸ்ட்டிர மாநிலம், மும்பை நகர், அம்பேத்கர் கார்டன் சேம்பர், BS7CHS Ltd., 18th Road, பிளாட் சி–56 ல் வசிக்கும் சந்திரசேகரன் என்பவரின் மகன் சுமார் 62 வயதுள்ள திரு.சி.ராமசுந்தரம். .. பிரதிவாதிகள்

(இ.ம.எண்.926/2018 ல் கடந்த 26.08.2019 ம் தேதிய உத்தரவின்படி 7 ம் பிரதிவாதியும், இ.ம.எண்.165/2019 ல் கடந்த 26.08.2019 ம் தேதிய உத்தரவின்படி 8 ம் பிரதிவாதியும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு இ.ம.எண்.3/2019 ல் கடந்த 19.11.2019 ம் தேதிய உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

கடந்த 20.11.2017 ம் தேதியன்று பழனி 1 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2436/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய உடன்படிக்கை பத்திரம் செல்லாது, அது வாதிகளை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்யும்படி கோரியும், 1 முதல் 4 பிரதிவாதிகளோ, அவர்களது முகவர்களோ தாவா சொத்தை பொறுத்து எவ்வித பந்தக பராதீனம் செய்யவோ, வில்லங்கங்களுக்கு உட்படுத்தவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கும்படி கோரியும், தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிகளுக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>விசயப்பொருளின் மதிப்பு:–</u> கடந்த 20.11.2017 ம் தேதிய கிரைய உடன்படிக்கை ஆவணம் செல்லாது என விளம்புகை கோரும் பரிகாரத்திற்கு வாதிகளின் தாவா மதிப்பு ரூ.5000/– அதற்கு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.150/– பிரிவு 25(டி)ன்படி கட்டப்பட்டுள்ளது.

தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்கு வாதிகளின் தாவா மதிப்பு ரூ.1000+ரூ.1000=ரூ.2000/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.30+ரூ.30= ரூ.60/– பிரிவு 27(சி)ன்படி கட்டப்பட்டுள்ளது.

தாவா மொத்த மதிப்பு ரூ.5000+ரூ.1000+ரூ.1000=ரூ.7000/–. மொத்த நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.150+ரூ.30+ரூ.30=ரூ.210/–.

வழக்கு மூலம் : 12.05.1894, 20.11.2017 மற்றும் 19.01.2018.

வழக்கு தாக்கல் செய்த நாள் : 08.06.2018 மற்றும் 13.06.2018

தீர்ப்பாணை

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சந்திரமோகன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.பசீர் அகமது அவர்கள் முன்னிலையாகியும், 2,3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.வி.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெ.உமர்கயான் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 6ம் பிரதிவாதி இவ்வழக்கிலிருந்து நீக்கறவு செய்யப்பட்டும், 7ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், 8ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஜி.சபிதா அவர்கள் முன்னிலையாகியும், தாவா பிராதை திருத்தம் செய்யவேண்டிய நிலையில், பிராதை திருத்தம் செய்வதற்கு ஏற்கனவே வாதிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளநிலையில், இன்றும் பிராதை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யாததால், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் தீர்ப்பாணையை வழங்குகின்றது.

1. இவ்வழக்கானது வாதிகளின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது.
2. இவ்வழக்கின் செலவு தொகையாக பிரதிவாதிகளுக்கு வாதிகள் ரூ.––– (செலவு தொகை பட்டியல் தாக்கல் இல்லை)–ஐ செலுத்தவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

<u>சொத்து விபரம்</u>

பழனி பதிவு மாவட்டம், பழனி 1 நிர் சார்பதிவகம், பழனி நகர், அடிவாரம், அருள்ஜோதி வீதி, பட்டா எண்.3403, பிளாக் 23 டி.எஸ்.958/2 க்கு சதுர மீட்டர் 0.1759.0 க்கு சதுரடி 18934 உள்ள காலிமனை இடத்திற்கு நான்குமால்.

வடக்கு – டி.எஸ்.958/1 ல் உள்ள கிருஷ்ணய்யர் மக்கள் வகையறா சொத்து,

கிழக்கு – அய்யம்புள்ளி போகின்ற வீதி (அருட்ஜோதி வீதி)

தெற்கு – முனிசிபல் சந்து

மேற்கு – பாலசமுத்திரம் ரோடு (அருட்ஜோதி வீதி).

இதற்குள் சதுர மீட்டர் 0.1759.0–க்கு சதுரடி 18934 உள்ள காலிமனை இடமும், மேற்படி இடத்திற்கேற்பட்ட சகல மாமூல் வழிநடை பாதை பாத்தியமும் மற்றும் அனுபவ பாத்தியங்கள் யாவும் சேர்ந்து.

–––––

2022 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழுங்கப்பட்டது.

(ஒம்)என்.ஞானசம்பந்தம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.80/2018
------

திரு.கே.வித்யாசங்கர் மற்றும் 3 நபர்கள். .. வாதிகள்

/எதிர்/

திரு.கே.சி.கிருஷ்ணன் மற்றும் 7 நபர்கள் .. பிரதிவாதிகள்

மதிப்பீட்டுச் சீட்டு

| | | |
|---|---|---|
| 1.வழக்கின் தன்மை | : | விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள். |
| 2.நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு | : | 25(டி) மற்றும் 27(சி) |
| 3.வழக்கின் மதிப்பு | : | ரூ.5000+ரூ.1000+ரூ.1000=ரூ.7000/- |
| 4.நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | : | ரூ.150+ரூ.30+ரூ.30=ரூ.210/- கட்டப்பட்டுள்ளது. |

உத்திரவுப்படி
(ஒம்) எல்.தேன்மொழி
தலைமை எழுத்தர்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பழனி.